# அருந்ததியர் உள் ஒதுக்கீட்டை எதிர்த்து டாக்டர் கிருஷ்ணசாமி வழக்கு



சென்னை, ஆக. 16: அருந்ததியர்களுக்கு 3 சத விகிதம் உள் ஒதுக்கீடு அளிக்கும் தமிழக அரசின் சட்டத்தை ரத்து செய்யக்கோரி புதிய தமிழகம் கட்சித் தலைவர் டாக்டர் கிருஷ்ணசாமி சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தாக்கல் செய்துள்ள பொது நல மனு: தமிழ்நாட்டில் கல்வி, வேலை வாய்ப்பில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு 18 சதவீதம் இட ஒதுக்கீடு வழங்கப்பட்டு வந்தது. இந்நிலையில் இந்த 18 சதவீதத்திலிருந்து 3 சதவீதத்தை அருந்தியர்களுக்கு உள் ஒதுக்கீடாக வழங்குவதற்கான சட்டத்தை 2009-ம் ஆண்டு தமிழக அரசு இயற்றியது. பின்னர் அதற்கான அரசாணையும் வெளியிடப்பட்டது.

தமிழக அரசின் இந்த உள்ஒதுக்கீடு சட்டம் அரசியல் சாசன சட்ட விதிகளுக்கு முரணானது. தமிழக அரசு தனது அதிகார வரம்பை மீறி இந்த உள்ஒதுக்கீடு சட்டத்தைக் கொண்டு வந்துள்ளது. அருந்ததியர்களுக்கு வழங்கப்பட்ட இந்த உள்ஒதுக்கீடு காரணமாக இதர தாழ்த்தப்பட்டவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த உள்ஒதுக்கீட்டை ரத்து செய்யக் கோரி மாநில ஆளுநர், மாநில முதல்வர் உள்பட பலருக்கும் ஏராளமான கோரிக்கை மனுக்களை அனுப்பியுள்ளேன். எனினும், எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று அவர் தனது மனுவில் கூறியுள்ளார்.

இந்த மனு தலைமை நீதிபதி எம்.ஒய். இக்பால், நீதிபதி டி.எஸ். சிவஞானம் ஆகியோரைக் கொண்ட முதன்மை அமர்வு முன்னிலையில் வியாழக்கிழமை விசாரணைக்கு வந்தது. அப்போது, இது தொடர்பாக தமிழக அரசு ஆறு வாரங்களுக்குள் பதில் மனு தாக்கல் செய்ய வேண்டும் என்று நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

அருந்ததியர் உள் ஒதுக்கீட்டை எதிர்க்கும்

# கிருஷ்ணசாமியின் வீட்டை முற்றுகையிடுவோம்

## ஆதிதமிழர் பேரவை எச்சரிக்கை

நெல்லை, ஆக. 19: ஆதிதமிழர் பேரவை பொதுச் செயலாளர் நாகராசன் நெல்லையில் நிருபர்களிடம் கூறியதாவது: நாளை 20ம் தேதி ஒண்டிவீரனின் நினைவு நாளை முன்னிட்டு நெல்கட்டும் செவலில் நடக்கும் நிகழ்ச்சியில் ஆதி தமிழர் நிறுவன தலைவர் அதியமான் தலைமையில் அன்று மதியம் 12 மணிக்கு வீர வணக்கம் செலுத்தும் நிகழ்ச்சி நடக்கிறது.

அன்று மாலை 6 மணிக்கு பாளை. ஜவகர் திடலில் மண்ணுரிமை மாநாடு நடக்கிறது. இதில் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல் திருமாவளவன், இந்திய கம்யூ. தேசிய செயலாளர் ராஜா, மார்க்சிஸ்ட் மாநில செயலாளர் ராமகிருஷ்ணன், ஜவாஹிருல்லா எம்எல்ஏ, அகில இந்திய கிறிஸ்தவ குழு தலைவர் குமார் சுவாமி உள்ளிட்டோர் கலந்து கொள்கின்றனர்.

அருந்ததியர்களுக்கு உள் ஒதுக்கீடு வழங்கப்பட்டதன் மூலம் மருத்துவம், இன்ஜினியரிங் கல்லூரிகளில் கூடுதல் இடங்கள் கிடைக்கிறது. அரசு பணிகளில் கூடுதல் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. அருந்ததியர்களில் 8 உட் பிரிவுகள் உள்ளன. இதையெல்லாம் கருதியே உள் ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது.

அரசியல் செய்வதற்கு வேறு வழியில்லாது மலிவான அரசியலுக்காக உள் ஒதுக்கீடு பிரச்னையை கிருஷ்ணசாமி கையில் எடுத்துள்ளார். அருந்ததியர்களுக்கான உள் ஒதுக்கீட்டை எதிர்த்து வரும் கிருஷ்ணசாமியை கண்டித்து மாநாடு முடிந்தவுடன் ஆர்ப்பாட்டம் நடத்த உள்ளோம். அவரது வீட்டையும் முற்றுகையிட்டு போராட்டம் நடத்துவோம். இவ்வாறு தெரிவித்தனர். மாவட்ட செயலாளர் கலைக்கண்ணன், மாநகர செயலாளர் வேலாயுதம், மாநில துணை பொதுச் செயலாளர் வீரமுருகன், பாரத்குமார் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.